# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 109/நகராட்சி/2019**
**நாள் : 03/09/2019**

**திருமதி R. செல்வநாயகி,**
**மஞ்சக்குப்பம்,**
**கடலூர் மாவட்டம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**நெல்லிக்குப்பம் நகராட்சி,**
**கடலூர் மாவட்டம்.** – **எதிர் மனுதாரர்**

கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பம், குமார் நகர், 16 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி R. செல்வநாயகி அவர்களின் 08.07.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 109/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரின் மனு சம்பந்தமாக நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பம், குமார் நகர், 16 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி R. செல்வநாயகி என்பவர், தனது கணவர் காலம் சென்ற D.G. இரவிச்சந்திரன் என்பவர், நெல்லிக்குப்பம் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக 01.07.2009–இல் பணியில் சேர்ந்து பணியாற்றி வந்த நிலையில் 22.12.2014–இல் இயற்கை எய்திவிட்டாரென்றும், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவேண்டிய தொகையினை வழங்கிட ஆவன செய்யக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. காலம் சென்ற நகராட்சிப் பணியாளர் திரு D.G. இரவிச்சந்திரன் என்பவரது பங்களிப்பு ஓய்வூதிய திட்டப் பிரேரணை 14.08.2018 அன்று சென்னை, கருவூல கணக்கு ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதென்றும், இது சம்பந்தமாக முழுமையான கருத்துருவை அனுப்பக்கோரியதின் அடிப்படையில், ஓய்வூதிய பங்களிப்புத் தொகை ரூ.85,940/– மற்றும் நிர்வாகப் பங்குத் தொகை ரூ.85,940/– அரசுக் கணக்கில் செலுத்திய விவரத்துடன், இறப்புச் சான்று, வாரிசு சான்று உள்ளிட்ட அனைத்து விவரங்களுடன் கருவூல கணக்கு ஆணையரகத்திற்கு 28.09.2018 நாளிட்ட கடிதம் எண். 5385/2018–இல் அனுப்பப்பட்டுள்ளது என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கருவூல கணக்கு ஆணையரின் பரிசீலனையில் உள்ளது. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை விடுவிப்பதற்கு கருவூல கணக்கு ஆணையரின் ஒப்புதல் பெற்றவுடன் காலம் சென்ற D.G. இரவிச்சந்திரன் என்பவரது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தொகையினை உடன் விடுவிக்குமாறு, நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள், 3–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4/9/2019

செயலாளர்.

4.9.19

4/9/19

**பெறுநர்**

1. **திருமதி R. செல்வநாயகி,**
   **எண்.16, குமார் நகர்,**
   **A.R.L.M பள்ளி பின்புறம்,**
   **மஞ்சக்குப்பம்,**
   **கடலூர் – 607 001.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **நெல்லிக்குப்பம் நகராட்சி,**
   **நெல்லிக்குப்பம்,**
   **கடலூர் மாவட்டம்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**